## நீலகிரி பாராளுமன்ற தொகுதியில் திரு. ஆ.இராசா, MP அவர்களின் வளர்ச்சிப் பணிகளின் பட்டியல்

- இந்திய அரசால் தொடங்கப்பட்ட அஞ்சலக அம்பு திட்டத்தின் கீழ் (Project Arrow) கோவை,அவினாசி, மேட்டுப்பாளையம், ஊட்டி உள்ளிட்ட அஞ்சலகங்களை மேம்படுத்தி நவீனமயமாக்கியது.

- வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இலவச மொபைல் போன்கள் வழங்கும் இந்திய அரசின் முன்னோடி திட்டத்தை திருப்பூர் மாவட்டம் அவினாசியில் தொடங்கியது.

- இந்திய அரசின் அஞ்சல் காப்பீட்டின் குறுங்காப்பீட்டு முன்னோடி திட்டத்தை கோத்தகிரியிலுள்ள சோலூர்மட்டம் கிராமத்தில் தொடங்கியது.

- சென்னைக்கு அடுத்தபடியாக நீலகிரி மாவட்டத்தை உள்ளடக்கிய கோவை தொலைத்தொடர்பு வட்டத்தில் 3G தொலைபேசி சேவை தொடங்கியது.

- உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம் (HPF) தொழிற்சாலையை ரூ 302 கோடியில் புனரமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று, முதல் கட்டமாக ரூ. 30 கோடி நிதியுதவி பெற்றுத் தந்தது.

- நீலகிரி மாவட்டத்தில் சாலைகளை மேம்படுத்த மத்திய நெடுஞ்சாலைத்துறை மூலம் மத்திய சாலை நிதியிலிருந்து (Central Road Fund) ரூ 43.90 கோடி ஒதுக்கீடு செய்தது. ( அவினாசி - மேட்டுப்பாளையம் சாலை 18.2 முதல் 38/2 கி.மீ வரை ரூ 19 கோடி , புளியம்பட்டி பவானிசாகர் பண்ணாரி சாலை 0/0 முதல் 10/4 கி.மீ வரை ரூ 5 கோடி, கூடலூர் சுல்தான் பத்தேரி சாலை 1/0 முதல் 10/0 கி.ம வரை ரூ 6 கோடி, கோழிக்கோடி - வைத்திரி-கூடலூர் சாலையில் 125/0 முதல் 134/4 கி.மீ வரை ரூ 9 கோடி, பெருந்துறை - கவுந்தபாடி சாலையில் 10/4 முதல் 16/4 கி.மீ வரை ரூ 4 கோடி)

- மத்திய நெடுஞ்சாலைதுறை மூலம் NH- 67 கோவை - காக்நல்லா (கர்நாடகா) வரையிலான சாலை விரிவாக்கப்பணி தொடங்கியது.

- நீலகிரி மாவட்டத்தை முழு கணினி மாவட்டமாக (E- District) அறிவித்து, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் 5 கோடி ஒதுக்கீடு செய்தது.

- நீலகிரியில் நவம்பர் 2009 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் நிலச்சரிவால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளை விரைந்து முடித்தது. மேலும் நிலச்சரிவில் வீடு இழந்தவர்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தந்து, சாலைகளை செப்பனிடுதல், சுகாதாரம், மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தமிழக அரசு மூலம் 70 கோடி ஒதுக்கீடு செய்தது.

- தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், காபி தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட தமிழக தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இணையானவர்கள் என்று தமிழக அரசால் ஆணை பிறப்பித்து அதன் மூலம் விவசாய தொழிலாளர்களுக்கு தமிழக அரசால் பல்வேறு நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவிகளை தோட்டத் தொழிலாளர்களும் பெற வழிவகை செய்யப்பட்டது.

- அவிநாசி அத்திக்கடவு நீர்த் தேக்க திட்டத்திற்கு மீண்டும் தமிழக அரசின் ஆய்வுக்கு உத்தரவிட்டது.

- பாரதியார் பல்கலைக்கழகக் கல்லூரி கட்டிடம் கட்ட தமிழக அரசு மூலம் 2 கோடி ஒதுக்கீடு செய்தது. மேலும் பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிக்கு ஆய்வக தளவாடங்கள் வாங்க ரூ 25 லட்சம் பெற்று தந்தது.

- அன்னூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுக்கா அறிவித்தது.

- அன்னூரில் புதிய சார்பதிவாளர் கட்டிடம் அமைத்து தமிழக அரசால் 28.00 லட்சம் ஒதுக்கீடு செய்தது.

- சத்தியமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைத்து.

- அன்னூர் ஒன்றியம் ஒன்றியம் பச்சாபாளையம், பூரண்டபாளையம், மோலப்பாளையம் ஊராட்சிகளுக்கு உட்பட்ட குடியிறுப்புகளுக்கு பில்லூர் குடிநீர் திட்டத்தில் விரிவாக்கம் செய்து இணைப்பு வழங்கியது.

- இதுவரை மின்சார இணைப்பு வழங்கப்படாத நெல்லித்துறை ஊராட்சிக்குட்பட்ட பரளிக்காடு பழங்குடியினர் வாழும் மலைப்பகுதியான கிராம மக்களின் வேண்டுகோளை ஏற்று மின்சார இணைப்பு வழங்கியது.

- அவினாசி அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கு பிரிவு அமைத்து தமிழக அரசால் 70.70 லட்சம் ஒதுக்கீடு செய்தது.

- கூடலூரில் பிறபடுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி அமைத்து தமிழக அரசால் 54.86 லட்சம் ஒதுக்கீடு செய்தது.

- தென்னக ரயில்வேயால் நிறுத்தப்பட்ட மேட்டுப்பாளையம் கோவை இடையிலான பாசஞ்சர் ரயிலை மீண்டும் தினசரி இரண்டு முறை இயக்கியது.

- ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் தாளவாடி ஒன்றியம் கோட்டமாளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தியது.

- ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் தாளவாடி ஒன்றியத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 7 சிறிய அணைகட்டுகள் (Check Dams) கட்டியது.

- மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ரூ. 6 லட்சத்தில் புதிய X-Ray இயந்திரம் வழங்கியது.

- கூடலூர் வட்டம் கொளப்பள்ளி மற்றும் கோத்தகிரி வட்டம் சோலூர் மட்டம் அரசு மருத்துவமனைகளுக்கு புதிய ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கியது.

- இதயநோய், புற்று நோய் உள்ளிட்ட நோயால் பாதிக்கப்பட்ட நீலகிரி பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 80 நபர்களுக்கு பாரத பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து அறுவை சிகிச்சைக்கு 60 லட்சம் நிதியுதவி பெற்றுத் தந்தது.

- சிறு குறு பசுந்தேயிலை தொழிற்சங்கத்தின் கோரிக்கையை ஏற்று மத்திய வர்த்தகத்துறை மூலம் உரிய விலை கிடைக்க ஆவணம் செய்யப்பட்டது

************